**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 42 /2023**

**Deposition of P.W.** 3

Name : திரு. செல்வின் ஜோசப்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 17.09.2025**

A1 to A5 Present. A6 absent Petition filed and allowed

**<u>முதல் விசாரணை–</u>**

நான் மார்த்தாண்டம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றிய போது 27.03.2021ம் தேதி சார்பு ஆய்வாளர்திரு. அருளப்பன், தலைமைக்காவலர் 2818 திரு. செல்வின் 1028 திரு. ராபர்ட் ராஜ் மற்றும் போலீஸ் சகிதம் இரவு ரோந்து அலுவலராக அதிகாலை 03.00 மணிக்கு மணலி பெட்ரோல் பல்க் அருகே சந்தேகப்படும் படியான 3 கார்கள் நின்று கொண்டிருந்தன. அங்கு சென்ற பார்த்தபோது அருகில் இருந்த தென்னந்தோப்பில் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். போலீசாரை பார்த்ததும் தப்பி ஓட முயன்றவர்களில்5 நபர்களை பிடித்தோம். பெயர், முகவரியை கேட்ட போது சுரேஜ், முகமது மைதீன், நாசர், ரெனு ஆண்டனி, தாசீம் ஆகியவர்களை பிடித்து விட்டோம். தப்பி ஓடியவர்கள் தினேஷ், கண்ணன், சச்சின் மற்றும் எட்வின் ராபர்ட்

என்பது தெரிய வந்தது. அருகில் இருந்த பெட்லோல் பல்க் மற்றும் கடைகளில் கொள்ளையடிப்பதற்காக நின்று கொண்டிருப்பதாக கூறினார்கள். கார்களை சோதனை செய்த போது எஸ்டிலோ காரில் இரண்டு அருவாள்கள் இருந்தது. இனோ காரிலும் இரண்டு அருவாள்கள் இருந்தது. சிப்ட் காரில் அருவாளும், ஒரு இரும்பு கம்பியும் இருந்தது. மேலும், இரண்டு நம்பர் பிளேட்டுகளும் இருந்தது. யமஹா இருசக்கர வாகனம் இருந்தது. அதில் பெட்ரோல் டேங்க் கவரில் சுத்தியல் இருந்தது. கூட்டுக்கொள்ளையடிப்பதற்காக வந்ததால் அந்த பொருட்களை அத்தாட்சியில் கைப்பற்றினோம். அந்த அத்தாட்சியில் நானும் தலைமைக்காவலர் 2818 திரு. செல்வின் கையொப்பம் செய்தோம் அந்த அத்தாட்சி ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சார்பு ஆய்வாளர் நிலையம் வந்து புகார் கொடுத்தார். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>1, 3 வது எதிரிகள். தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் மணலி அருகே நாகர்கோவில் – திருவனந்தபுரம் சாலை அருகே உள்ளது. அந்த சாலையில் வாகன போக்குவரத்து மற்றும் ஆட்கள் நடமாட்டம் மிகுதியாக இருக்கும் என்றால் சரிதான் . தேசீய நெடுஞ்சாலையில் போலீசார் ரோந்தும் இருக்கும் என்றால் சரிதான். 06.04.2021ம் தேதி சட்ட சபை தேர்தல் இருந்தது என்றால் சரிதான். சந்தேகப்படும்படியாக ஆட்கள் இருப்பதாக யாரும் புகார் சொல்லவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் வெளிச்சமான இடம் தான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தின் கிழக்கே 150 அடி துாரத்தில் பெட்ரோல் பல்க் உள்ளது என்றால் சரிதான். அதில் வேலை ஆட்கள் மற்றும சி.சி.டி.வி கேமரா உண்டு என்றால் சரிதான். அதில்

ஆட்கள் பெட்ரோல் போடுவதற்காக கூடும் இடம் என்றால்சரிதான். அதற்கும் கிழக்கே கார் ஓர்க் ஷாப் உள்ளது. கார் ஓர்க் ஷாப்பில் 3 இரவு காவலர்கள் உண்டு என்றால் சரியல்ல. சம்பவ இடமாக சொல்லும் இடத்தின் அருகே வீடுகள் உள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடமாக சொல்லும் இடத்தின் அருகே பெரிய கிரானைட் கடைகள் உள்ளது என்றால் சரிதான். அதில் வேலையாட்கள் மற்றும் இரவு காவலர்கள் உண்டு என்றால் சரிதான். அதில் கண்காணிப்பு கேமரா உண்டு என்றால் அதை நான் பார்க்கவில்லை. விஜயா மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். அந்த மருத்துவமனை பெரிய மருத்துவமனை என்றால் சரிதான். மருத்துவமனையில் இரவு காவலர் உண்டு. சி.சி.டி.வி கேமராவும் உண்டு. மேற்படி இடங்களில் உள்ள நபர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை. அத்தாட்சியில் தனி நபர் சாட்சிகள் கையொப்பம் செய்யவில்லை. யாரும் அங்கிருந்து ஓடவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஓட முயற்சி செய்தவர்களை பிடித்தோம். 1வது எதிரியை சம்பவ இடத்தில் வைத்து பிடிக்கவில்லை. 3வது எதிரியையும் வழக்கிற்காக பின்னர் சேர்த்தோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திலிருந்து 10 நிமிடத்தில் காவல்நிலையத்திற்கு வந்து விடலாம். எதிரிகளிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றவில்லை. 1, 3 எதிரிகள் பெயரில் வாகனங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிரிகள் கைகளில் ஆயுதங்கள் வைத்திருக்கவில்லை. எதிரிகளிடம் வாக்குமூலம் வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது வாகனத்திற்கு பின்னால் எதிரிகள் நின்றதாக கூறவில்லை. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2வது எதிரிதரப்பு குறுக்கு விசாரணை.</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தின் கிழக்கே கிரானைட் கடை உள்ளது என்றால் சரிதான். மருத்துவமனைக்கு கிழக்கே இளநீர் கடை உள்ளது என்றால் சரிதான். மருத்துவமனை, பெட்ரோல் பல்க், மற்றும் கிரானைட் கடையில் கண்காணிப்பு கேமராக்கள் உண்டு என்றால் சரிதான். மேற்படி நிறுவனங்கள் 24 மணி நேரமும் செயல்படக்கூடியது என்றால் சரிதான். மருத்துவமனை மற்றும் பெட்ரோல் பல்கில் காவலாளிகளும், பயனாளிகளும் இருப்பார்கள் என்றால் சரிதான் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தின் மேற்கே ஒர்க்ஷாப் உள்ளது என்றால் சரிதான். எந்த வானத்தில் எந்த திசையில் ரோந்து போனோம் என்று காவல் ஆய்வாளரிடம் நான் கூறவில்லை. எதிரிகளை எந்த வாகனத்தில் அழைத்து வந்தோம் என்று சொல்லவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் தேசீய நெடுஞ்சாலையின் அருகே உள்ளது என்றால் சரிதான். அதில் ஆட்கள் நடமாட்டம் அதிகம் உள்ளது என்றால் சரிதான். சந்தேகத்திற்கு இடமாக கூட்டமாக ஆட்கள் நிற்பதை பார்த்தால் யாராவது போலீசாருக்கு தகவல் சொல்லி இருப்பார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 3 வாகனங்களும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றவில்லை. வாகனங்கள் மருத்துவமனைக்கோ, ஒர்க்ஷாப்பிற்கோ வந்திருக்க வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. சம்பவ நேரத்தில் சட்டமன்ற தேர்தல் இருந்தது என்றால் சரிதான். எதிரிகள் தான் அங்கு நிற்கிறார்கள் என்று முன்னரே எங்களுக்கு தெரியாது. பெயர், விபரங்களை எதிரிகள் தான் சொன்னார்கள். அந்த விபரத்தை காவல் ஆய்வாளர் விசாரணையில் சொன்னேன். தேர்தல் நேரத்தில் தொடர்குற்றவாளிகளை கண்காணிக்கும் நடைமுறை உள்ளது என்றால் சரிதான். எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>4வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

யாருடைய தென்னந்தோப்பின் அருகே நின்று கொண்டிருந்தார்கள் என்று எனது விசாரணையில் கூறவில்லை. தென்னந்தோப்பில் வைத்து பார்த்ததாக கூறவில்லை. தென்னந்தோப்பின் பக்கம் என்று தான் கூறியுள்ளேன். அருகே எந்த இடம் என்று குறிப்பிட்டு கூறவில்லை. 3 கார்களின் கலரை நான் குறிப்பிடவில்லை. வாகனத்தின் எந்த இடத்திலிருந்து ஆயுதங்களை கைப்பற்றினோம் என்று குறிப்பிட்டு கூறவில்லை. எதிரிகளிடம் கார் சாவியை வாங்கி திறந்து பார்த்ததாகவும் நான் கூறவில்லை. எதிரி காரில் இல்லை. எதிரியிடமிருந்து ஆயுதங்கள் கைப்பற்றவில்லை நான் சொன்னது போல் ஆயுதம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும, இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>5, 6 வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அத்தாட்சியில் உள்ள விபரங்கள் அனைத்தும் சம்பவ இடத்தில் எழுதப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு தான் சார்பு ஆய்வாளர் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 அத்தாட்சியில் குற்ற எண். குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் எதிரிகள் கையொப்பம் இல்லை. அத்தாட்சியில் வரிசை எண் 5 முதல் 9 வரையிலான சொத்துக்களில் திருத்தம் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அத்தாட்சிய்ல சிப்ட் காரின் எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் நம்பர் இல்லாத சிப்ட் கார் என்ற கூறியுள்ளேன் என்றால் சரிதான். அத்தாட்சியில் நம்பர் பிளேட் எந்த காரிலிருந்து கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிட்டு கூறவில்லை. எதிரிகள் அடையாளம் காட்டி வழக்கு

சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை. நாங்களே சோதனை செய்து ஆயுதங்களை கைப்பற்றினோம். ரெனு ஆன்டனியை தென்னந்தோப்பில் வைத்து தான் பிடித்தோம். 6வது எதிரி மீது தக்கலை காவல்நிலையத்தில் பல வழக்குகள் உண்டு எனவே அவரை எனக்கு முன்னரே தெரியும். 6வது எதிரி தப்பித்து ஓடியதாகவோ, சம்பவ இடத்தில் நின்றதாகவோ நான் காவல் ஆய்வாளரிடம் கூறவில்லை. எதிரிகளுக்கு கைது நமூனா கொடுத்துகைது செய்வோம் என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சிகள் இல்லாததால் நாங்களே கையொப்பம் செய்து கைது நமூனா கொடுத்தோம் என்றால் சரியல்ல. சொன்னது போல் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும், பொருட்களை கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 42 /2023**

**Deposition of P.W.** 4

Name : திரு. செல்வின்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 17.09.2025**

A1 to A5 Present. A6 absent Petition filed and allowed

**முதல் விசாரணை–**

நான் தற்போது வடசேரி காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் 27.03.2021ம் தேதி காலை 03.00 மணிக்கு ரோந்து பணிக்கு நானும், தலைமைக்காவலர் 1963 திரு. செல்வின் ஜோசப் மற்றும் முதல்நிலை காவலர் 1028 ராபர்ட் மற்றும் சார்பு ஆய்வாளருடன் தணிக்கை சென்ற போது மணலி பெட்ரோல் பல்க் அருகே 3 கார்கள் நின்று கொண்டிருந்தது. சந்தேகத்தின் பேரில் இறங்கி அங்கு நின்றவர்களை விசாரித்த போது பாதி பேர் தப்பி ஓடி விட்டார்கள். 5 நர்பகளை பிடித்தோம். வாகனங்களை சோதனை செய்த போது இனோவா காரில் 2 அருவாள்களும், மாருதி சென் காரில் 2 அருவாள்களும், மற்றொரு மாருதி காரில் ஒரு அரிவாளும், கம்பியும் இருந்தது. ஒரு யமஹா இருசக்கர வாகனமும் நின்றது. அந்த வாகனத்தில் ஒரு இரும்பு சுத்தியல் இருந்தது. மேற்படி வாகனங்களையும், ஆயுதங்களையும் அத்தாட்சியில்

கைப்பற்றியதற்கு அந்த அத்தாட்சியில் கையொப்பம் செய்தேன். சார்பு ஆய்வாளர் புகார் கொடுத்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்

**1, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் 5 பேரை பிடித்தோம். மீதி பேர் தப்பி ஓடி விட்டார்கள். 4 பேர் தப்பி ஓடி விட்டார்கள். ரெனு ஆன்டனியை வழக்கிலிருந்து விட்டு விட்டோம் என்றால் காவல்நிலையம் கொண்டு போனோம்அதன் பின்னர் நடந்த விசயம் எனக்குத் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தின் அருகே மருத்துவமனை, ஒர்க்ஷாப், கிரானைட் கடை ஆகிய நிறுவனங்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நிறுவனங்களில் ஊழியர்களும், கண்காணிப்பு கேமராக்களும் இருக்கும் என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லும் இடம் தேசீய நெடுஞ்சாலையின் அருகே இருப்பதால் வாகன போக்குவரத்து மற்றும் போலீசார் ரோந்து இருக்கும் என்றால் சரிதான். 06.04.2021ம் தேதி தமிழக சட்டசபை தேர்தல் நடந்தது என்றால் சரிதான். தேர்தல் சமயம் போலீஸ் பாதுகாப்பு மிகுதியாக இருக்கும் என்றால் சரிதான். தேர்தல் சமயம் என்பதால் புள்ளி விபரத்திற்காகபொய் வழக்கு போட்டோம் என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து ஆயுதம் கைப்பற்றப்படவில்லை. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால்சரியல்ல. 1, 3 எதிரிகள் பெயரில் வாகனங்கள் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2வது எதிரியிடமிருந்து ஆயுதம் கைப்பற்றபடவில்லை. நான் கையொப்பம் செய்த அத்தாட்சி இடைசெருகல் இல்லாத அத்தாட்சி என்றால் சரிதான். 2வது எதிரிக்கு சம்மந்தப்பட்ட வாகனம் கிடையாது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. தேர்தல் புள்ளி விபரத்திற்காக

போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>4வது எதிரிதரப்பு குறுக்கு விசாரணை</u>

தென்னந்தோப்பு யாருடையது என்று நான் கூறவில்லை. தென்னந்தோப்பின் அருகே என்று தான் குறிப்பிட்டுள்ளேன். எந்த இடம் என்ற குறிப்பிட்டு கூறவில்லை. 4வது எதிரியிடமிருந்து எவ்வித ஆயுதமும் கைப்பற்றவில்லை. அவர்பெயரில் வாகனங்களும் இல்லை. அத்தாட்சியில் வாகனத்தின் நிறம் பற்றி குறிப்பிடவில்லை. சொன்னதுபோல் சம்பவ இடத்தில்வைத்து வாகனங்கள் கைப்பற்றபடவில்லை என்றும் ஆயுதங்களும் கைப்பற்றப்பவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>5, 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

அத்தாட்சி சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு தான் உதவி ஆய்வாளர் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து குற்ற எண்ணுடன் கூடிய அத்தாட்சி தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் மாருதி காரின் எண் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. ஆய்வாளர் விசாரணையில் மாருதி கார் எண் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. அத்தாட்சியில் உள்ள வரிசை எண். 5 முதல் 9 வரையிலான பொருட்களில் இடைசெருகல் உள்ளது என்றால் சரிதான். அதில் கையொப்பம் எதுவும் செய்யப்படவில்லை. எதிரியிடமிருந்து சான்று பொருட்கள் கைப்பற்றப்படாததால் கையொப்பம் பெறவில்லை என்றால் சரியல்ல. 4 எதிரிகள் தப்பி ஓடியதாக

ஆய்வாளரிடம் கூறவில்லை என்றால் சரியல்ல. . வழக்கிற்காக சான்று பொருட்களை காவல்நிலையத்தில்வைத்து தயாரித்தோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளரிடம் கூறாத விபரங்கள் குறித்து மிகைப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.